பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
11 08 2025 MONDAY 6.30 PM

## வணக்கம்-மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. திருத்தியமைக்கப்பட்ட வருமான வரி சட்ட மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

2. விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழகத்திற்கான சிறு துறைமுக திட்டங்களை மத்திய அரசு விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

4. சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் 22 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

திருத்தியமைக்கப்பட்ட வருமானவரி சட்ட மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

முன்னதாக, இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய. நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தும் திருத்தியமைக்கப்பட்ட இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

>>>>>><<<<<<

தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளிக்கிடையே இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேசிய விளையாட்டு அமைப்புகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றிற்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் தேவையான அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

>>>>>><<<<<<

ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சி நடைபெற்ற இடத்தை மத்திய அரசு மேம்படுத்தியுள்ளதாக கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தின் சார்பில் திருச்சியில் அருங்காட்சியகம் தொடங்குவது தொடர்பான எந்தவொரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

ஊரகப் பகுதிகளில் தனியார் பங்களிப்புடன் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜெயின் சௌத்ரி, இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க இது உதவிடும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

*பயிர் காப்பீட்டு திட்டங்களில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*ராஜஸ்தானில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 3 ஆயிரத்து 900 ஆயிரம் கோடி ரூபாயை விடுவித்து அவர் பேசினார்.*

*நாடுமுழுவதும் 35 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் இதன் மூலம் பயனடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கு மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*சாகர்மாலா திட்டத்தின் கீழ், தமிழகததில் மேம்படுத்தப்பட வேண்டிய சிறுதுறைமுக திட்டங்களை மத்திய அரசு விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.*

*இதுதொடர்பாக, மாநில அமைச்சர் திரு. எவ.வ. வேலு, மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவாலை தில்லியில் சந்தித்து கோரிக்கை மனுவினை வழங்கினார்.*

*>>>>>><<<<<<*

*மீனவர்கள் நலனில் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்தி வருவதாக மாநில அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.*

*இன்று தூத்துக்குடியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டுப் படகு மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணை வழங்கப்படுவதாக கூறினார்.*

மீனவர்களின் நலனை கருத்தில் கொண்டு கடலோரப் பகுதிகளில் தூண்டில் வளைவு அமைத்தல். தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

திமுக அரசின் செயல்பாடுகள் காரணமாக, அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறியுளளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து துறைகளிலும் ஊழல் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

ஆசிரியர் மற்றும் மருத்துவ காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் குறை கூறினார்.

>>>>>><<<<<<

பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேரணியாக தேர்தல் ஆணையத்திற்கு சென்றனர்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

இருப்பினும். காவல்துறையினர் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இதற்கிடையே, அரசியல் சாசன அமைப்புகளின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

*புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். தேர்தல் ஆணையத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்க தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்ததாக கூறினார்.*

*இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து உறுப்பினர்களையும் தேர்தல் ஆணையம் சந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.*

*எதிர்க்கட்சிகளின் இந்த செயல்பாடு ஏற்புடையதல்ல என்றும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.*

*>>>>>><<<<<<*

*சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 45 செகண்ட்ஸ்)*

*கடல்பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 தினங்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 29 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மாவட்டச் செய்திகள்*

*செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டலின் இன்று திறந்து வைத்தார்.*

*>>>>>><<<<<<*

திருச்சியில் தாழ்தள பேருந்து போக்குவரத்து சேவையை மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

அரியலூர் மாவட்டம், வெள்ளாற்றில் அமைக்கப்பட்ட தற்காலிக மண் தரைப்பாலம் உடைந்ததால், 10 கிராமங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், புளியஞ்சோலை பகுதியில் கரடி நடமாட்டம் தென்பட்டதால், அப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்டத்தில் போதைப் பொருட்கள் விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. மயில்வாகணன் எச்சரித்துள்ளார்.

>>>>>><<<<<<

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசின் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை இம்மாதம் இறுதிவரை நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி. அருணா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டத்தில் வன விலங்குகள் நடமாட்டம் தொடர்பாக தகவல்களை வழங்குவதற்கென 24 மணிநேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி சேவை செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

>>>>>><<<<<<

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே. போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

சிவகாசியில் பட்டாசு உற்பத்தி நிறுவனங்களுக்கு சொந்தமான 10 இடங்களில் வருமான வரித் துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் 22 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 80 கிலோ எடைப்பிரிவில் Ritika தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Yatri, 60 கிலோ எடைபிரிவில் பிரியா ஆகியோரும், ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் நீரஜ்-ம், 90 கிலோ எடைப்பிரிவில் Ishan-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் Bhawna, 65 கிலோ எடைப்பிரிவில் Parthavi, 70 கிலோ எடைபிரிவில் Pranjal, 75 கிலோ எடைப்பிரிவில் Sruti ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் Hars, 80 கிலோ எடைபிரிவில் Ankush, 85 கிலோ எடைபிரிவில் Rockey, 90 கிலோ எடைப்பிரிவில் Mayur ஆகியோரும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>>><<<<<<

உலக விளையாட்டுப் போட்டிகளின் WUSHU பிரிவில் இந்தியாவின் Namrata Batra இறுதியாட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், பிலிப்பைன்ஸின் Krizan Faith Collado-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*

*இங்கிலாந்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale – இங்கிலாந்தின் Naiktha Bains இணை பட்டம் வென்றது.*

*>>>>>>END<<<<<<*